U.S. Consulate General Chennai
Press Release
220, Anna Salai, Gemini Circle, Chennai 600 006
Phone: +914428574181 | Email: ChennaiPressMbox@state.gov
https://in.usembassy.gov/embassy-consulates/chennai/ | usconsulatechennai
chennai.usconsulate | USAndChennai | AmConGenChennai | USConsulateChennai

# அமெரிக்காவின் 246-வது சுதந்திர தின நிகழ்ச்சியில் அமெரிக்க-இந்திய உறவின் 75-வது ஆண்டை சென்னை அமெரிக்க துணைத் தூதரகம் கொண்டாடியது

சென்னை, ஜூன் 17:

அமெரிக்காவின் 246-வது சுதந்திர தினத்தையும் அமெரிக்கா மற்றும் இந்தியா இடையேயான 75 ஆண்டு கால உறவையும் சென்னையில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகம் வியாழக்கிழமை (ஜூன் 16, 2022) அன்று சென்னையில் கொண்டாடியது. அமெரிக்காவில் ஃபோர்த் ஆஃப் ஜூலை என்று அழைக்கப்படும் சுதந்திர தினம், ஜூலை 4, 1776 அன்று சுதந்திரம் பிரகடனப்படுத்தப்பட்டதை குறிக்கிறது.

துணைத் தூதர் ஜூடித் ரேவின் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். சென்னையில் உள்ள துணைத் தூதர் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு புது தில்லியில் உள்ள இந்தியாவுக்கான அமெரிக்க தூதரகத்தின் துணை முதன்மை அதிகாரி (பொறுப்பு) பிரையன் ஹீத் தலைமை வகிக்க, தமிழ்நாடு அரசின் தொழில், தமிழ் அலுவல் மொழி, தமிழ்க் கலாச்சாரம், மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் தமிழ்நாட்டின் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைச்சர் டாக்டர் பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் தமிழக அரசின் சார்பாக முதன்மை விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

அமெரிக்க-இந்திய அதிகாரப்பூர்வ ராஜதந்திர உறவுகளின் 75 ஆண்டுகளின் வரலாற்று சிறப்பு மிக்க அம்சங்களை குறிக்கும் வகையிலான காணொலி, நிகழ்ச்சியின் போது திரையிடப்பட்டது. சென்னையை சேர்ந்த நவீன ஜாஸ் பாடகியான சுஷா ராஜா அமெரிக்க மற்றும் இந்திய தேசிய கீதங்களை பாடினார்.

விருந்தினர்களிடையே உரையாற்றிய புது தில்லி அமெரிக்க தூதரகத்தின் துணை முதன்மை அதிகாரி (பொறுப்பு) ஹீத், அமெரிக்கா மற்றும் இந்தியா இடையேயான வலுவான உறவு குறித்து எடுத்துரைத்தார். “உலகத்தின் முன்னால் இருக்கும் சில முக்கிய சவால்களை நாம் ஒன்றிணைந்து

எதிர்கொண்டுள்ளோம். பருவநிலை சிக்கல்கள், சர்வதேச பெருந்தொற்று எதிர்வினைக்கு தலைமை வகித்தல், தங்குதடையற்ற இந்திய-பசிபிக் என நமது மக்களின் வாழ்வை மேம்படுத்தும் மற்றும் உலகளாவிய நன்மைக்கு வழிவகுக்கும் அனைத்து துறைகளிலும் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து பணியாற்றி வருகின்றன. இன்னும் வளமிக்க, சுதந்திரமான, இணைப்பு வசதிகள் நிறைந்த மற்றும் பாதுகாப்பான உலகை உருவாக்க அமெரிக்க-இந்திய கூட்டு எத்தனை முக்கியமானது என்பதையும், நமது உறவு மேலும் வலுப்பட எந்தளவு சாத்தியங்கள் உள்ளன என்பதையும் 75-வது ஆண்டில் நமது கூட்டாண்மை வெளிப்படுத்துகிறது," என்று அவர் கூறினார்.

இரு நாடுகளுக்கிடையேயான வலுவான பிணைப்பிற்கு பங்காற்றும் விருந்தினர்களுக்கு நன்றி தெரிவித்த அவர், "நமது இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை நீங்கள் அதிகரித்து, புதிய சுகாதார சவால்களை எதிர்கொள்வதற்கான ஆராய்ச்சியை மேற்கொண்டு, பருவநிலை மாற்றத்தை எதிர்கொண்டு, பல்வேறு துறைகளில் புதுமைக்கு வழிவகுத்து, கல்வி மற்றும் தொழில்சார்ந்த பரிமாற்றங்களின் மூலம் சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து வருகிறீர்கள்," என்று கூறினார்.

தமிழ்நாடு அரசு மற்றும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சார்பாக தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் நிதி அமைச்சர் டாக்டர் பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினர். அமெரிக்க சுதந்திர தினம் மற்றும் அமெரிக்க-இந்திய உறவின் 75-வது ஆண்டுக்கு வாழ்த்துகளை தெரிவித்த தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழகத்தில் முதலீடு செய்யுமாறு அமெரிக்க தொழில்துறைக்கு அழைப்பு விடுத்தார். "துறைமுகங்கள், விமான நிலையங்கள் போன்ற வசதிகளை பெற்றுள்ள தமிழ்நாடு, தொழில்துறை வளர்ச்சிக்கு உகந்த வகையில் திகழ்கிறது. முற்போக்கான மற்றும் செயல்திறன் மிக்க அரசின் காரணமாக முதலீட்டாளர்கள் மிகவும் விரும்பும் மாநிலமாக தமிழ்நாடு தற்போது உள்ளது," என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், அமெரிக்காவில் அவர் தங்கியிருந்த காலம் அவரது வாழ்வை வடிவமைக்க உதவியது என்றார். "அமெரிக்க வாழ்வுமுறை எனக்கு பலவிதங்களில் தனித்துவத்தை தந்தது. இரு நாட்டு மக்களுக்கிடையேயான பிணைப்பு மிகவும் வலுவாக திகழும் நிலையில், இந்த உறவு மேலும் வளரும் என்றும், இந்தியா மற்றும் அமெரிக்கா இடையேயான உறவுகளை அது மேலும் வலுப்படுத்தும் என்றும் உறுதியாக நம்புகிறேன்," என்று அவர் கூறினார்.

சென்னையை சேர்ந்த குவில்ட் (துணிகளால் செய்யப்படும் கலை வடிவம்) மற்றும் பீஸ்போக் வடிவமைப்பாளர் கோனாக் பை மஞ்சரி (Cognac by Manjeri) பிரத்யேகமாக உருவாக்கிய கலைப்பொருள், பதினெட்டாம் நூற்றாண்டில் அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் விடுதலையை நோக்கி ரயில் சுரங்கப்பாதையில் தப்பிப்பதற்கு வழிகாட்டிய அமெரிக்க குவில்ட் வகைகளை காட்சிப்படுத்தியது. ஜூன் மாத அமெரிக்க தேசிய விடுமுறைகளான கொடி நாள் மற்றும்

ஜூன்டீன்த் ஆகியவற்றை குறிக்கும் வகையில் அது அமைந்திருந்தது. அமெரிக்க பாரம்பரிய கலையான குவில்ட்டிங் இன்றும் பிரபலமாக உள்ளது.

பிளாக்கெண்ட் பொடி இட்லி, சதர்ன் ஃபிரைடு சிக்கன் ஆன் தோசா வேஃபிள் மற்றும் கார்டமாம் பிரவுனீஸ் உள்ளிட்ட அமெரிக்க மற்றும் தென்னிந்திய உணவு வகைகள் கலந்து உருவாக்கப்பட்ட விருந்துடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

**புகைப்பட விளக்கம்:**

புகைப்படம் 1:

(இடமிருந்து வலம்) தமிழ்நாடு அரசின் தொழில், தமிழ் அலுவல் மொழி, தமிழ்க் கலாச்சாரம், மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, புது தில்லி அமெரிக்க தூதரகத்தின் துணை முதன்மை அதிகாரி (பொறுப்பு) பிரையன் ஹீத், திருமதி மார்கரெட் தியாகராஜன், தமிழ்நாடு நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைச்சர் டாக்டர் பழனிவேல் தியாகராஜன், சென்னை அமெரிக்க துணைத் தூதரகத்தின் துணைத் தூதர் ஜூடித் ரேவின் ஆகியோர் அமெரிக்காவின் 246-வது சுதந்திர தினத்தையும் அமெரிக்கா மற்றும் இந்தியா இடையேயான 75 ஆண்டு கால உறவையும் கொண்டாடுவதற்காக வியாழக்கிழமை (ஜூன் 16, 2022) அன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றனர். விழாவுக்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட குவில்ட் கலைப்பொருளின் முன்பு அவர்கள் நிற்கின்றனர்.

புகைப்படம் 2:

சென்னையில் வியாழக்கிழமை (ஜூன் 16, 2022) அன்று நடைபெற்ற அமெரிக்காவின் 246-வது சுதந்திர தினம், மற்றும் அமெரிக்கா மற்றும் இந்தியா இடையேயான 75 ஆண்டு கால உறவை கொண்டாடும் நிகழ்ச்சியில் (இடமிருந்து வலம்) சென்னையில் உள்ள இந்திய-அமெரிக்க வர்த்தக அமைப்பின் பிராந்திய இயக்குநர் சுஜாதா ரவிஷங்கர், சென்னை அமெரிக்க துணைத் தூதரகத்தின் அரசியல் மற்றும் பொருளாதார பிரிவின் தலைவர் விர்சா பெர்கின்ஸ், மற்றும் கைடென்ஸ் தமிழ்நாடு நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரி பூஜா குல்கர்னி ஐஏஎஸ்.

###